# ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருடன் பிரதமர் சந்திப்பு

டிசம்பர் 01, 2023

துபாயில் 1 டிசம்பர் 2023 அன்று நடக்கும் சிஓபி 28 உச்சிமாநாட்டின் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடியை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் திரு. அன்டோனியோ குட்ரெஸ் சந்தித்தார்.

இந்தியாவின் ஜி20 தலைமையின் போது ஐநா பொதுச்செயலாளர் அளித்த ஆதரவிற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். காலநிலை இலக்குகளை அடைவதில் இந்தியாவின் முன்முயற்சிகள் மற்றும் முன்னேற்றத்தை அவர் எடுத்துரைத்தார்.

காலநிலை நடவடிக்கை, காலநிலை நிதி, தொழில்நுட்பம் மற்றும் ஐநா உட்பட பலதரப்பு ஆளுகை மற்றும் நிதி நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் தொடர்பான உலகளாவிய தெற்கின் முன்னுரிமைகள் மற்றும் கவலைகள் குறித்து இரு தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

ஜி20 தலைமையின் கீழ் நிலையான வளர்ச்சி, காலநிலை நடவடிக்கை, பன்னாட்டு வளர்ச்சி வங்கி சீர்திருத்தங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளில் இந்தியாவின் முயற்சிகளை ஐநா பொதுச்செயலாளர் பாராட்டினார். பிரதமரின் பசுமைக் கடன் முயற்சியை அவர் வரவேற்றார். 2024 ஆம் ஆண்டுக்கான ஐநா உச்சி மாநாட்டில், இந்தியாவின் தலைவர் பதவியின் சாதனைகளைக் கட்டியெழுப்பவும், அவற்றை முன்னெடுத்துச் செல்லவும் இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதாக அவர் உறுதியளித்தார்.

**துபாய்**
**டிசம்பர் 01, 2023**